# 4. பாரதப் பாசறை

## இந்நாடகத்தைப் பற்றிய செய்திகள் வருமாறு:

| | |
|---|---|
| நாடகக்கதை, வசனம், பாடல்கள் | : கவிஞர் பாரதிதாசன் |
| நாடக நடிகர் | : ஆர். பக்கிரிசாமி (காரைக்கால் - முன்பு மாடர்ன் தியேட்டர்ஸ்) |
| நாடக நடிகை | : இந்திரா (சிவாஜி மேனேஜர் மோகன்தாஸ் துணைவி) |
| மூலக்கதை படியெடுத்தோர் | : இராகவராஜ், திருமலைராஜபட்டினம் த. நடராசன். |
| நாடகம் நடந்த இடம் | : இராசா சர் அண்ணாமலை மன்றம், சென்னை |
| நாடகத் தலைமை | : வி.பி. இராமன் |
| நாடக அமைப்புச் செயலர் | : தஞ்சைவாணன் (தஞ்சாவூர்) பாபு சனார்த்தனம் (திருவில்லிப்புத்தூர்) |
| நாடக இசையமைப்பு | : கே. சுப்பிரமணியம் |
| இசை ஒத்திகை இடம் | : 10, இராமன் தெரு, தியாகராய நகர், சென்னை. |
| நடிப்பு ஒத்திகை இடம் | : நடிகர் பிரண்ட் இராமசாமி வீட்டின் மேல்மாடி, இராயப்பேட்டை, சென்னை. |
| நாடக இயக்குநர் | : எஸ். ஏ. கண்ணன், 18, பசுமர்த்தி தெரு, ரங்கராஜபுரம், சென்னை - 20. |
| நாடகம் பற்றிய செய்திகளைத் தந்தவர் | : கவிஞர் தஞ்சை வாணன் (நேருரை: நாள் 28.7.1984) |

## பாரதப் பாசறை

சீனப்போர் கடுமையாக நடந்துகொண்டிருந்த நேரம். பஞ்சசீலம் பேசிய சீனாவை நம்பியிருந்த இந்தியா, திடீரெனத் தாக்கப்பட்டு தோல்வியைச் சந்தித்துக் கொண்டிருந்த நேரம். உயர்ந்த இமயமலை முகடுகளில் எந்த வசதியும் இல்லாத இந்திய வீரர்கள், எல்லாவித வசதிகளையும் பெற்றிருந்த சீனப்படையால் சூழப்பட்டு, செங்குருதி சிந்திக்கொண்டிருந்த அச்செய்தி பரபரப்பாக வெளிவந்து கொண் டிருந்தது. இமயமலையிலிருந்த லடாக் போர் முனையில் இராணுவத் தின் பல போர்ப்படை முகாம்கள் வீழ்ந்து கொண்டிருக்கும் சோகச் செய்தியை அன்றாடம், காலை, மாலை நாளேடுகள் பரபரப்பாக வெளியிட்டுக்கொண்டிருந்தன.

இந்தியாவின் தோல்விகள் பாவேந்தரை உணர்ச்சி வசப்பட வைத்திருந்தன. சீனாவை நம்பிய இந்தியா கிடைத்தற்கரிய வீரர்களை இப்படி இழக்கும் நிலை வந்துவிட்டதே என்று பலமுறை சொல்லிச் சொல்லி உள்ளம் உருகிக் கொண்டிருந்தார் பாவேந்தர்.

ஒரு நாள் மாலை 'மாலை முரசு' பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தார் கவிஞர். அதில் ஒரு சீக்கியப் போர்மறவர் லடாக் போர்முனையில் பெருந்திரளாக வந்து தாக்கிய சீனப்போர் வீரர்களோடு தனியே போரிட்டு, தன் துப்பாக்கியிலிருந்த குண்டுகள் தீர்ந்துவிட்ட நிலையிலும், தான் படுகாயமுற்ற நிலையிலும் சீனப்போர் வீரர்கள் மத்தியில் பாய்ந்து, குண்டில்லாத துப்பாக்கிக் கட்டைகளால் அவர்களைத் தாக்கி வீரமரணம் அடைந்த செய்தி வந்திருக்கிறது. இதைப்படித்த கவிஞர் உணர்ச்சி வசப்பட்டு, 'இங்கே பார்த்தாயா, தன் துப்பாக்கியிலிருந்த குண்டுகள் தீர்ந்த நிலையிலும், பெருந்திரளாகச் சூழ்ந்த சீன வீரர்கள் மத்தியில் புகுந்து தாக்கி, நாட்டுக்காக வீரமரணம் அடைந்த சீக்கிய வீரரின் வீரச்செயலை!' இச்செயல் நம்முடைய சங்க இலக்கியங்களில், குறிப்பாக புறநானூறு, புறப்பொருள் வெண்பா மாலை நூல்களில் கூறப்பட்டுள்ள தமிழ் மறவர்களின் வீரச் செயல் களுக்கு ஒப்பானது. இதுபோன்ற வீரச் செயல்கள் காவியங்களாக்கப் படவேண்டியவை. நாடகங்களாக்கப்பட்டு மக்களிடையே பரப்பப்பட

வேண்டியவை. அப்போதுதான் இந்திய இளைஞர்கள் வீறு கொள்வார்கள்; விழிப்படைவார்கள். வருங்காலத்தில் அந்நியர்களிட மிருந்து இந்தியாவைக் காக்கும் வீரத்திறனைப் பெறுவார்கள். என்ன இருந்தாலும் சீனர்களால் நேரு ஏமாற்றப்பட்டு விட்டார். இந்தியா இப்போதைக்கு தோற்கடிக்கப்பட்டு விட்டது. தற்காப்புக் கொள்கையில் இந்தியா எப்படியிருக்க வேண்டும்; எப்படியிருக்கக்கூடாது என்பதற்கு இது ஒரு நல்ல படிப்பினை. அதற்காக நாம் கொடுத்திருக்கும் விலை தான் பெரிது" என்று கூறிவிட்டுச் சிறிது நேரம் அமைதியில் ஆழ்ந்துவிடுகிறார்.

பிறகு கொஞ்சநேரம் கழித்து, பக்கத்தில் நின்றிருந்த என்னைப் பார்த்து, "நீ உடனே பாரி நிலையம் சென்று 'புறப்பொருள் வெண்பா மாலை' நூல் ஒன்று வாங்கிவா என்று ஆணையிடுகிறார். நான் "அய்யா, அந்த நூல் நம்மிடம் இருக்கலாம். தேடிப்பார்க்கிறேன். இங்கு இல்லை யென்றால் புதுவையில் இருக்கலாம். அண்ணனுக்கு (மன்னர் மன்னனுக்கு) மடல் எபதி அஞ்சலில் அனுப்பச் சொல்லலாம்' என்று கூறுகிறேன்.

உடனே பாவேந்தர் தன் வலது கையை அசைத்து, "இல்லை யில்லை; அது இருக்கட்டும்; நீ முதல்ல உடனே, போய் இன்னொரு நூல் வாங்கிவிட்டு வா" என்று முற்றுப் புள்ளி வைக்கிறார். 'இப்பொழுது மாலை ஆறுமணிக்கு மேல் ஆகிவிட்டது. நாளை காலையில் போய் வாங்கி வருகிறேனுங்க அய்யா' என்று நான் கூறியவுடன், "சரி, சரி! நாளைக்கே போய் வாங்கிவா" என்று அமைதியடைகிறார்.

மறுநாள் காலை பத்து மணிக்குப் 'பாரி நிலையத்திற்குப் புறப்படுகிறேன். அப்போது பாரி நிலையத்தில் தணிக்கை முடிந்ததன் தொடர்பாக உங்களது நூல்களுக்கு வரவேண்டிய தொகைக்குக் காசோலை அனுப்பியிருந்தனரே; அதை நாம் நம் கணக்கில் வரவு வைத்துக்கொண்டோம். அதையும் பாரி நிலைய உரிமையாளர் திரு. செல்லப்பாவிடம் நினைவுபடுத்தட்டுமா? என்று கேட்கிறேன். "ஆமாம், அது அவர்களின் கணக்குக்கு உதவியாய் இருக்கும். அதைத் தெரிவித்து விடு" என்று ஒப்புதல் அளிக்கிறார். நண்பகல் பதினோரு மணிவாக்கில் பாரி நிலையம் செல்கிறேன். பாவேந்தரின் பேரன்புக் குரியவரும், நிலையத்தின் உரிமையாளருமான திரு.செல்லப்பா அவர்கள் இருக்கிறார். அதன் அப்போதைய நிர்வாகியான திரு. பரதனும்

இருக்கிறார். இவரும் பாவேந்தரின் அன்புக்குரியவர். இவர் குடும்பமும் இவர் தந்தையாரும், தாயும் தமிழில் சிறந்த புலமை மிக்கவர்கள். இவருடைய மாமாவும், சமண நெறி அறிஞருமான திரு. ஜீவபந்து ஸ்ரீ பால் அவர்கள் பாவேந்தருக்கு மிகவும் வேண்டியவர். நான் கேட்ட புறப்பொருள் வெண்பா மாலை நூல், அவர்களிடம் இல்லாததால் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கு ஆள் அனுப்பி ஒரு நூல் வாங்கிக் கொடுத்தனர். பாவேந்தருக்கு வந்த காசோலையைப் பாவேந்தர் கணக்கில் வைத்துக் கொண்டதையும் திரு. செல்லப்பா அவர்களிடம் கூறியதும், ‘சரி’யென்று ஒப்புக்கொள்கிறார். பிறகு அவர்களிடம் விடை பெற்று வீடு திரும்பினேன்.

நூலைப் பாவேந்தரிடம் கொண்டுவந்து கொடுத்தபோது மிகவும் மகிழ்ச்சியடைந்து அந்த நொடியிலிருந்தே ‘புறப்பொருள் வெண்பா மாலை’ யைப் படிக்கத் தொடங்கிவிட்டார். பிறகு குறிப்பெடுப்பதற்கு, தாள்களை மடித்துச் சிறிய வடிவில் சுவடிபோல் செய்து கொடுக்கும்படி கேட்கிறார். நானும் அப்படியே இருபது பக்கங்களுடைய சிறு சுவடியாக மடித்து அமைத்துக் கொடுக்கிறேன். அதில் முதல் பக்கத்தின் தலைப்பில் ‘1’ என்று போட்டு ‘புறப்பொருள் வெண்பா மாலை’ - குறிப்பு என்று அவரே தன் கைப்பட எழுதுகிறார். அந்த நூலிலிருந்து பதினேழு பாடல்களைப் பொறுக்கியெடுத்து அவர் கைப்படவே அச்சுவடியில் எழுதினார். அன்றே சீனர்களை எதிர்த்து ஒரு பாடலும் எழுதினார்.

அவர் எழுதிய பாடல் இதோ:

**சென்றதடா அமைதி நோக்கி உலகம் - அட**
**சீனாக்காரா ஏண்டா இந்தக் கலகம்?**

**நன்றாகநீ திருந்த வேண்டும் -**
**ஞாலம் உன்னை மதிக்க வேண்டும்!**
**ஒன்றாய்ச் சேர்ந்து வாழ வேண்டும்!**
**ஒழுக்கம் கெட்டால் என்னவேண்டும்?**

**உலகம் எல்லாம் பொதுவென்றாய்**
**உரிமை எல்லாம் பொதுவென்றாய்**
**கலகம் செய்து நிலத்தை எல்லாம்**
**கைப்பற்றத்தான் முயலுகின்றாய்!**

பொதுவுடைமைக் கொள்கை ஒன்று
பூத்துக் காய்த்து வருமின்று
பொதுவுடைமை எனக்கென்று
புகன்றாயே குறுக்கில் நின்று!

கொலைகாரப் பசங்களோடு
கூடுவது மானக் கேடு!
இலைக்காக மரத்தை வெட்டி
ஏற்றுக் கொள்வதெந்த நாடு!

உயிர்காப்பது பொதுவுடைமை
உயிர்போக்குதல் பெருமடமை!
உயர்வான இக்கருத்தை
உணர்வதுதான் உன்கடமை!

- இந்தப் பாடலை எங்களிடம் இனிமையாகப் பாடியும் காட்டினார். இப்படி உணர்ச்சி ததும்பும் சீன எதிர்ப்புப் பாடல்களை, இந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் பாடல்களை, உலக அமைதியை நாடும் பாடல்களை எழுதினார். இந்தப் பாடல்களை அப்பொழுது அவரிடம் வந்த இசைமாமணி குடந்தை சீனிவாசன் அவர்களிடம் கொடுத்து பாவேந்தர் பாடிக் காட்டியதோடு, அவரையும் பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்தார். திரு.குடந்தை சீனிவாசன் அவர்கள் இன்றைய சென்னை இசைக் கல்லூரியின் முதல்வராக உள்ள இசையறிஞர் திரு.திருப்பாம்பரம் சண்முக சுந்தரம் அவர் களுடன் அன்று வந்திருந்தார். அவரின் தந்தையான திரு.சோமசுந்தரம் பிள்ளையும், பெரியப்பா திரு.சாமிநாத பிள்ளையும் பெரிய இசை மேதைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு.குடந்தை சீனிவாசன் அவர்கள் பாவேந்தரின் பேரன்பில் பல ஆண்டுகளாகக் கலந்திருந்தவர். அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1945ஆம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்த போதே பாவேந்தரின் அன்பிற்குரியவராகிவிட்டவர். அவரின் குரலினிமையினாலும் பாவேந்தரின் பாடல்களை உணர்ச்சியோடு பாடியமையினாலும் அன்று முதல் அவர் நெஞ்சைக் கவர்ந்தவர் இவர். சென்னையில் அந்நாளில் பழைய மாம்பலத்திலுள்ள அஞ்சுகம் உயர் நிலைப் பள்ளியில் இசையாசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த

இவர், திரு.தில்ரூபா சண்முகம் போன்றாருடன் அவ்வப்போது பாவேந்தரைப் பார்க்க வருவார்.

சீனப்போரின் பாதிப்பினால் அவர் எழுதிய இசைப் பாடல்களில்

"சூ என் லாய் - நீ
சீனமக்களுக்கு ஏற்பட்ட ஒரு நோய்"

என்று தொடங்கும் பாடலை கோபக் குமுறலோடு, சோகம் இழைய அவர் பாடும்போது அவ்வளவு உருக்கமாக இருக்கும். இப்படி எழுதப் பட்ட பாடல்கள் பல 'இனமுழக்கம்' என்ற பத்திரிகையில் வெளி வந்தன. திரு.கணேசன் என்பவரை நம்பி கவியரசு கண்ணதாசன் 'தென்றல்' பத்திரிகையை ஒப்படைத்திருந்தார். தமிழ்த் தேசிய கட்சி, சொல்லின் செல்வர் திரு.சம்பத்தினால் தொடங்கப்பட்டு இயங்கி வந்த நேரம். கவிஞர் கண்ணதாசனின் தென்றலைத் திரு. கணேசனிடமிருந்து இன்னொருவர் விலைக்கு வாங்கி விட்டார். தென்றல் பத்திரிகையை இழந்தபின் 'தென்றல் திரை' என்றவொரு பத்திரிகையை வாங்கி கவி யரசு கண்ணதாசன் நடத்தி வந்தார். அப்போது 'இனமுழக்கம்' என்ற பத்திரிகைக்கும் அவர் ஆசிரியராக இருந்தார். அதன் உரிமையாளர் முன்னாள் மாநகராட்சி உறுப்பினர் திரு.தேவராசன் என்பவர். இந்தப் பத்திரிகையின் அலுவலகம் பழைய வண்ணையில் இயங்கிவந்தது. அந்தப் பத்திரிகையின் நிர்வாகியாக இருந்தவர் பல பத்திரிகைகளில் பணியாற்றி, புகழ்பெற்ற திரு.விவேகானந்தன் அவர்கள். 'விவேக்' என்ற பெயரிலும் இவருடைய படைப்புகள் வெளிவரும். பாவேந்தரின் விருப்பத்தின்படியும் கவிஞர் கண்ண தாசனின் வேண்டுகோளின் படியும் சீனப் போரின் போது எழுதப்பட்ட பல நாட்டுணர்ச்சிப் பாடல்களை 'இனமுழக்கம்' பத்திரிகைக்குக் கொண்டுபோய்க் கொடுத்தேன். நிர்வாகியும், நிர்வாக ஆசிரியருமான திரு.விவேகா னந்தன் அவர்கள் அவற்றைப் பெற்று 'இனமுழக்கம்' பத்திரிகையில் வெளியிட்டு வந்தார்கள்.


பாவேந்தர் தமிழ், மற்றும் தமிழருக்காக மட்டுமே பாடினார் என்று பாவேந்தரை முழுமையாக உணராதவர்கள் கூறிவருகிறார்கள். நாட்டுக்கும் மக்களுக்கும் எந்தெந்தக் காலங்களில் எது எது தேவையோ, அவற்றை அந்தந்தக் காலங்களில் பாவேந்தர் பாடி யிருக்கிறார். சீனப் போரினால் இந்திய நாட்டுக்கும் இந்திய ஒருமைப் பாட்டிற்கும் ஆபத்து வந்தபோது கொதித்தெழுந்தார்; பாவேந்தர் பாடினார் என்பதை அவர்கள் இனியேனும் உணரவேண்டும்.

அதுமட்டுமல்லாமல், பாவேந்தர் சீனப் போரை மையமாக வைத்து ‘பாரதப் பாசறை’ என்ற நாடகத்தையும் எழுதினார். அதை தமிழக அரசு ஏற்று நடத்தி, நாட்டு மக்களிடையே நாட்டுப்பற்றை ஊட்ட வேண்டும் என்று விரும்பினார். அதற்காகப் பலமுறை புரட்சிக் கவிஞர் அப்போதைய செய்தித்துறை அமைச்சர் திரு.பூவராகவன், பாவேந்தரின் பேரன்புக்குரிய மற்றொரு அமைச்சர் திரு. மஜீத் போன்றோரைச் சந்தித்துத் தன் விருப்பத்தைத் தெரிவித்தார். அவர்களுடன் பலமுறை நானும் ஆயிரம் விளக்கில் குடியிருந்த காங்கிரஸ் இயக்கப் பெரியவர் திரு.பண்டிட் முகமதுவும், திரு.குடந்தை சீனிவாசன் அவர்களும் சென்றிருக்கிறோம்.

ஆனால் பாவேந்தரின் இந்த விருப்பம் என்ன காரணத்தாலோ நிறைவேறவில்லை. இருப்பினும் பாவேந்தர் தன் விருப்பத்தைத் தானே நிறைவேற்றினார். அந்த நாடகத்தை (பாரதப் பாசறை) பெரும் இன்னல்களுக்கும், செலவுகளுக்குமிடையே சென்னை இராசா அண்ணாமலை மன்றத்தில் அரங்கேற்றினார். அப்படியென்றால் இந்திய நாட்டின் ஒற்றுமை மீதும் வெற்றியின் மீதும் அவருக்கிருந்த பற்றையும் பாசத்தையும் தெளிவாகக் காணமுடிகிறதல்லவா?

- *பாரதிதாசன் குயில், புதுச்சேரி*, **10.6.1967**

◆ ◆ ◆


பாவேந்தர் பாரதிதாசனுர்...
74.வது பிறந்த நாள் விழாக்குழுவினர்

பாவேந்தர்
"பார்தப் பாசறை"

29.4-63 திங்கள் மாலே 6 மணி

நாடகம்

இந்நாள் நடைபெறும் இந்தக் கலே நிகழ்ச்சி பாவேந்தர் 1930-ல் தனி நூலாக இயற்றி வெளியிட்ட கற்கண்டு என்னும் நகைசுவை நாடகமும், சீன எதிர்ப்பும், சேர்ந்ததாகும்.

அனைவரும் ஆதரிக்க வேண்டுகிறோம்.

இவ்வணம்,
N. பாபு

பாவேந்தரின் தேசியக்கொள்கையை விளக்கும் 'பாரதப்பாசறை' எனும் நகைச்சுவை நாடகம் - விளம்பரம் (ப. 181)

நாட்டன்பையும் பாரத வீரரின் எழுச்சியையும் சீன எதிர்ப்பின் இன்றியமையாமையையும் விளக்கும் மிகச்சுவையுடைய ஒரு நகைச்சுவை நாடகம் பாவேந்தரால் 'பாரதப் பாசறை' என்னும் பெயரில் இயற்றப்பட்டு அவரின் 74ஆவது பிறந்த நாள் விழா (29.4.1963) வின்போது வென்னை இராசா அண்ணாமலை மன்றத்தில் நடத்தப்பெற்றது. 'கற்கண்டு' என்ற பெயரில் தனி நூலாக முன்னரே வெளியிடப்பட்ட பாவேந்தரின் நாடகப் பகுதிகளோடு சீன எதிர்ப்பையும் இணைத்து எழுதப்பட்டதே 'பாரதப் பாசறை'.

- இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன்,
ஆசிரியர் - இரா. இளவரசு, ப.85, மறுபதிப்பு 2005

◆ ◆ ◆